**MCOP No.52/2021**

**தேதி- 24.03.2025**

**பெயர் : திரு. கன்னியப்பன், த/பெ. ராமசாமி**

**ம.சா.1** **சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

ம.சா.ஆ.19 ஆவணத்தை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மகன் அன்பு வேலை செய்ததற்கு பணம் வந்ததற்கான ஆதாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.19 ஆவணத்தில் யார் யாரிடமிருந்து எவ்வளவு பணம் எதற்காக வந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும், வேலை செய்ததற்காக சம்பளமாக வந்தது என்பதற்காக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அது மாதிரி எதுவும் இல்லை, என் மகன் அன்பு வேலை செய்ததற்கான பணம் தான் அது.

என் மகனின் Income Tax Returns தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு தாக்கல் செய்தால் தான் வங்கி பரிவர்த்தனையில் உள்ளது எல்லாம் Reflect ஆகும் என்றாலும், ம.சா.ஆ.19 ஆவணத்தில் உள்ள விவரங்கள் அதில் வராததால் தான் Income Tax Returns தாக்கல் செய்ய இயலவில்லை என்பது சரியா தவறா என்றால் சரிதான். என் மகனுக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் கிடையாது என்றாலும், வருமானத்தை அதிகமாக காண்பிக்க தான் ம.சா.ஆ.19 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என் மகனின் வருமானத்தை காட்ட தான் ம.சா.ஆ.19 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

நான் சொல்வது போல் ம.சா.ஆ.19 ஆவணமானது என் மகனின் வருமானத்தை காட்டுவதாக இல்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக அந்த ஆவணத்தை

தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.